DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No:STC.176/2025**
Prosecution witness **PW.3(LW.4)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr. Munusamy | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : | | |

**(Accused A2 present. A1 Absent. Petition U/s. 355 of BNSS filed and allowed. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **25.08.2025**

**25.08.2025** **முதல் விசாரணை** :

நான் கொலக்கொம்பை மணியாபுரத்தில் குடியிருந்து தோட்டம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வ மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் முதலாவதாக கண்டுள்ள சாடசி கையொப்பம் என்னுடையது தான்.

1) கடந்த 31.01.2025 – ஆம் தேதி மாலை சுமார் 05.30 மணி முதல் 05.40 மணிக்குள் எங்கள் ஊர் மணியாபுரம் பஸ்நிறுத்தம் அருகில் நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த ராமஜெயன் என்ற பையனும் நின்று கொண்டிருந்தபோது கொலக்கொம்பை போலீசார் அந்த இடத்திற்கு வந்து பஸ்நிறுத்தம் ஓர்த்தில் ஒட்டிஇருந்த வால்போஸ்டரை யார் ஒட்டினார் என்று கேட்டார்கள். போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளதை பார்த்தீர்களா என்று கேட்டார் ஆம் நான் பார்த்தேன் என்று சொல்ல போலீசுக்கு அடையாளம் காட்டினேன்

2) சம்பவஇடத்தை பார்வையிட்டு போலீசார் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள். அதல் நானும் மேற்படி ராமஜெயனும் சாட்சி கையொப்பம் செய்தேம். (**அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன்பிறகு என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**(கைப்பற்றுதல் மகசரில் கண்டள்ள அசா.3 இன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

1) பிரச்சனைக்குரிய நோட்டீஸை யார் ஒட்டினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த நோட்டீஸானது பஸ்நிறுத்தத்திற்கு வெளிப்புறமாக ஒட்டப்பட்டிருந்ததா, உள்புறமாக ஒட்டப்பட்டிருந்ததா என்றால் உள் புறமாகத்தான் ஒட்டியிருந்தது. அந்த நோட்டீஸை போலீசாருக்கு காட்டிவிட்ட நான் சென்றுவிட்டேனா என்றால் ஆம். அநத் நோட்டீஸ் என்ன என்ன வாசம் எழுதியிருந்து எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் படித்து பார்க்கவில்லை.

2) போலீசார் சம்பவஇடத்திற்கு வந்தபோது பொதுமக்கள் சுமார் 3, 4 பேர் இருந்திருப்பார்கள். அந்த பஸ்நிறுத்தத்தில் வேறுஏதேனும் போஸ்டர்கள் ஒட்டப்படிருந்ததா என்றால் அது எனக்கு தெரியாது. எனது மனைவி அந்த ஏரியாவின் திமுக கவுன்சிலர் என்றால் சரிதான். அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக எதிரி மீது கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> :

//ஒப்பம்// R.அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்.